*World ChristianFellowship*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# *கலாத்தியர்*
# *பாடம் 11 சுவிசேஷத்தோடு இசைந்து வாழ்தல்! எப்பொழுதும்!!*

***கலாத்தியர் 2:11-14, 11. மேலும், பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது, அவன்மேல் குற்றஞ்சுமந்ததினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன்.12. எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான். 13. மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம்பண்ணினார்கள்; அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான். 14. இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச்சொன்னது என்னவென்றால்: யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறஜாதியாரை யூதர்முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக்கட்டாயம் பண்ணலாம்?***

***கலாத்தியர்** 2:4–5 பாடம் 9ல் நாம் பார்த்தோம் எருசலேமில் யூதர்கள் சிலர் தீத்துவை நிர்பந்திக்க முயன்றார்கள், கிரேக்க கிறிஸ்தவரான அவரை விருத்தசேதனம் பண்ண முற்சித்தார்கள். இந்த அழுத்தத்தை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் முற்றிலுமாக நிராகரித்தார். அதற்கு பவுல் கொடுக்கும் காரணம், "**சுவிசேஷத்தின் சத்தியம் உங்களிடத்திலே நிலைத்திருக்கும்படி**. "**(கலாத்தியர் 2:5)***

தீத்துவுக்கு விருத்தசேதனம் பண்ணப்படும் படி கட்டாயப்படுத்தும் காரியத்தில் பவுல் அதற்கு இசைந்து போயிருந்தால்,

- சுவிசேஷத்தின் களங்கமில்லா தன்மை சீர்குலைந்து போய் இருக்கும்.
- புறஜாதியாரின் வளர்ச்சி நின்று போய் இருக்கும்,
- கிறிஸ்து மறித்தது வீணாய் இருக்கும், மற்றும் நாமெல்லோரும் தேவ கோபாக்கினைக்கு ஆளாகி இருப்போம் நம் பாவங்களுக்காக.



*சுவிசேஷம் என்பது நற்செய்தியாகும். தேவனோடு ஒப்புரவாகும் அந்த விலை மதிப்பில்லா பாக்கியம் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மறித்து உயிர்த்ததினால் நமக்கு கிடைத்தது. அந்த பாக்கியத்தை நாம் அன்பவிக்க வேண்டுமானால் தேவ குமரன் மேல் விசுவாசமாய் வாழவேண்டும் அவர் தான் நம்மேல் அதீத அன்பு வைத்து தன்னையே நமக்காக தந்தார்.*

*உண்மையான சுவிசேஷத்தோடு மக்களின் சுய கிரியைகளை செய்ய தூண்டும் காரியங்களை நீங்கள் சேர்த்தால் அந்த அருமையான சுவிசேஷத்தை களங்கப்படுத்தி விட்டிர்கள் என்று அர்த்தம்.*

*சுத்திகரிக்கப்படுவதும் நீதிமானாக்கப்படுவதும் விசுவாசத்தால் வராவிடில் கிறிஸ்து மறித்தது வீணே. எனவேதான் பவுல் இங்கு தைரியமாக சொல்லுகிறார் தீத்து விருத்தசேதனம் பண்ண கட்டாயம் பண்ணப்படவில்லை என்று, அப்பொழுது தான் சுவிசேஷம் உங்களில் நிலைத்து இருக்கும் மற்றும் வாழ்வில் தொடர்ந்து வரும்.*

## *சுவிசேஷத்தின் உண்மை மற்றும் பவுலின் அப்போஸ்தல தன்மை*

*இப்பொழுது 2:11–14 ல் வாசிக்கும் போது "சுவிசேஷத்தின் உண்மை" சுட்டிக்காட்டப்பட்டிருப்பதை காண முடியும்.*
*மீண்டும், புறஜாதிகள் யூதர்களைப் போல் வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.*

*எருசலேமில் விருத்தசேதனம் ஒரு மிக முக்கியமான பிரச்சனையாக இருந்தது.*

*அந்தியோகியா சபையில்* ***லேவியராகமம் 11ல்*** *சொல்லப்பட்ட யூத உணவு முறைகள் பின்பற்றவது ஒரு பிரச்சனையாக இருந்தது.*

*இந்த இரண்டு காரியங்களும் தீத்து விவகாரம் மற்றும் அந்தியோகிய சபையின் விவகாரத்தை வெளிப்படுத்துகிறது.*

***முதலாவது கவனிக்க வேண்டியது,***
***"கட்டாயப்பண்ணப்படுதல்."***
*வசனம் 3ல் பவுல் சொல்லுகிறார்* ***"தீத்து...விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளும்படிக்குக் கட்டாயம்பண்ணப்படவில்லை".***
*வசனம் 14ல் அந்தியோகியாவில் பவுல் கேபாவுக்கு சொல்லுகிறார்,* ***" யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்து கொண்டிருக்க, புறஜாதியாரை யூதர்முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக்கட்டாயம் பண்ணலாம்?"***

*அடுத்தபடியாக "**சுவிசேஷத்தின் உண்மை.**"*
*வசனம் 5ல் பவுல் சொல்லுகிறார்* ***"சுவிசேஷத்தின் சத்தியம் உங்களிடத்திலே நிலைத்திருக்கும்படி, நாங்கள் ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை".***

*வசனம் 14ல் பவுல் சொல்லுகிறார்* ***" அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது"***

*பவுல் வசனம் 11-44 நமக்கு கற்று கொடுப்பது என்னவென்றால் அவர்கள் விருத்தசேதனம் மற்றும் பிற சடங்குகளை பின்பற்றுவதோடு மட்டுமில்லாமல் நம் மேலும் அவைகளை திணித்து சுவிசேஷத்தை முரண்பாடாய் போதித்து வழி நடத்தி விடுவார்கள் என்பதே.*

*பவுல் தன் அப்போஸ்தலத்தன்மையை நிரூபிக்கிறார்*

- ✓ *பவுல் தேவனால் அழைக்கப்பட்டவர்*
- ✓ *பவுல் மனுஷரால் அனுப்பபப்படவில்லை*
- ✓ *பவுல் மனுஷர் மூலம் அனுப்பபப்படவில்லை*
- ✓ *அவர் செய்தியை இயேசு கிறிஸ்துவிடம் இருந்து பெற்று கொண்டார்*
- ✓ *அவர் தீத்துக்கு விருத்தசேதனம் செய்யாதபோது அப்போஸ்தலர்களால் அவருடைய செய்தி உறுதிப்படுத்தப் பட்டது.*
- ✓ *பவுல் தான் பேதுருவுக்கு சமமாய் இருப்பதை நியாயப் படுத்துகிறார்*
- ✓ *எருசலேம் தேவாலயம் மற்றும் முக்கிய தலைவர்கள் ஒப்புக்கொண்டனர்*
- ✓ *எருசலேமில் தலைமைத்துவம் இந்த செய்தியை ஆதரித்தது.*

*இதுவரை அப்போஸ்தலனாகிய பவுல் எந்தவொரு அப்போஸ்தலர்களிடமிருந்தும் ஏவுதல் அல்லது வழிகாட்டுதல் இல்லாமல் சுதந்திரமாக செயல்படுகிறார் என்பதை உறுதிப்படுத்தினார்.*

## *பவுல் பேதுருவை எதிர்கொள்கிறார்*

*இன்றைய பாடத்தில் உள்ள வேத வசனம் கலாத்தியர் 2:11–14 பவுல் மீண்டும் ஒருவிசை தான் தேவனால் அனுப்பபப்பட்டதையும் எருசலேமில் உள்ள எந்த அப்போஸ்தலராலும் கட்டுப்படுத்தப்படாமல் சுதந்திரமாய் செயல்படுவதையும் இங்கு தெளிவு படுத்துகிறார். பவுல் எருசலேமில் உள்ள ஆலோசனை சங்கத்திற்கு சென்ற பிறகு,*

*கலந்தியாவில் உள்ள ஒருவரும் அவர் அப்போஸ்தலனாகிய பேதுருவின் தலைமையின் கீழ் மற்றும் அவரின் ஆதரவில் ஊழியம் செய்கிறார் என்றும் பேதுரு யோவான் மற்றும் யாக்கோபின் காரியங்களுக்காக சென்றுள்ளார் என்றும் நினைக்க கூடாது. இந்த வேத பகுதியிலிருந்து நாம் தெளிவாக ஒரு காரியம் அறிந்து கொள்ளலாம் பவுல் பேதுருவினால் வழிநடத்தப்படவில்லை, பேதுரு தான் பவுலினால் கடிந்துகொள்ளப்படுகிறார்.*

*ஆலோசனை சங்கத்திற்கு பிறகும் பவுல் தான் தன்னிச்சையாக செயல்படுவதை மிகவும் வலுவாக உறுதிப்படுத்துகிறார். பவுல் ஒரு மனிதனாலும் நடத்தப்படாமல் கிறிஸ்துவின் தூதனாக (Ambassador) செயல்படுகிறார்.*

*ஒரு சிலர் நினைக்கலாம் பவுல் பேதுருவோடு கூடிய அந்த கருது வேறுபாட்டை மிகவும் அதிகமாகவே எடுத்து கூறிவிட்டார் எனவே அங்கு ஒரு குழப்பம் ஏற்பட்டது என்று. பவுலுக்கும் பேதுருவுக்கும் கருத்து வேறுபாட்டை இந்த வசனங்கள் மிகவும் விரிவாகவே சொல்லுகின்றன என்று வாதாடலாம். பவுலுக்கும் அவருக்கும் உள்ள நல்ல ஐக்கியம் சற்று முரண்பட்டது.*

1. *இந்த மோதலுக்கு பிறகு அந்தியோகியாவில் பவுலும் பேதுருவும் எதிரிகள் ஆனார்கள் அல்லது சுவிசேஷத்தின் உண்மையை மாற்றினார்கள் என்று எந்த ஆதாரமும் இல்லை.*
   *மாறாக பேதுரு தன்னுடைய முதல் நிருபத்தை பிற்காலத்தில் எழுதும் போது பவுலை போலவே இவரும் புறஜாதியரை குறித்து எழுதுகிறார்.*
   *பேதுரு பவுலின் கடிதங்களை சுட்டிக்காட்டி எழுதும் போது அவரின் வார்த்தைகள் புரிந்து கொள்வதற்கு அரிதாய் இருக்கிறது என்கிறார்* ***2 பேதுரு 3: 15-16.***

2. *அந்தியோகியாவில் ஏற்பட்ட மோதல்கள் பேதுருவின் தற்காலிக மற்றும் முரண்பாட்டின் நடத்தை காரணமாக இருந்தன, ஆனால் கோட்பாட்டில் ஆழமான வேறுபாடு காரணமாக இல்லை.*
3. *பவுலுக்கு பேதுருவுக்கும் இடையில் சுவிசேஷத்தினிமித்தம் ஏற்பட்ட இந்த கருத்துவேற்பாடு பெரிதாக இல்லாவிடில் காலத்தியர்* ***2 :1-10*** *இல் எழுதப்பட்டது வீணாக இருக்கும்.*

*பவுல் 2:1-10 ஐ எழுதுவதன் நோக்கம் அங்கு குழப்பம் நேர்ந்த பின்பும் அந்தியோகியாவில் ஒற்றுமை நிலைத்தது. அந்தியோகியாவில் ஏற்பட்ட மோதல்கள் இறையியல் கோட்பாடுகளில் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லை. இது பேதுரு மற்றும் பர்னபாவின் இதயங்களில் விசுவாசத்தின் தற்காலிக வீழ்ச்சியை வெளிப்படுத்தியது.*

## ***அந்தியோகியாவில் நடந்த மோதல்:***

1. *பேதுரு அந்தியோகியாவுக்கு வந்து, புறஜாதி கிறிஸ்தவர்களோடு சேர்ந்து, அவர்களோடு சாப்பிடுகிறார். (வசனம் 11&12)*
2. *எருசலேமில் யாக்கோபுடன் இருந்த மனிதர்கள் அந்தியோகியாவிற்கு வருகிறார்கள். (வசனம் 12)*
3. *பேதுரு எருசலேமிலிருந்து வந்த மனிதர்களைப் பற்றி பயந்தார். (வசனம் 12)*
4. *எருசலேமிலிருந்த வந்த மக்களின் மீதான பயத்தினால், பேதுரு புறஜாதி கிறிஸ்தவர்களிடம் இருந்து தன்னை விலக்கிக் கொண்டார் (வசனம் 12)*
5. *மற்ற யூதர்களும் பேதுருவோடு சேர்ந்து கொண்டு அவ்வாறே செய்தனர் (வசனம் 13)*

6. *பவுலின் தோழனாகிய பர்னபாவும் அவ்வாறே செய்தார் (வசனம் 13)*
7. *பேதுரு கடிந்து கொல்லப்பட்டு குற்றமனசாட்சியோடு நின்றார். (வசனம் 11)*
8. *எல்லாருக்கும் முன்பு பவுல் பேதுருவை முகத்திற்கு எதிராகவே கடிந்து கொள்கிறார் (வசனம் 11)*
9. *பவுல் கலாத்தியாவில் உள்ள எல்லா சபைகளுக்கும் எழுதுகிறார் நம்முடைய சபைக்கும் சேர்த்து!*
10. *பேதுருவின் நடத்தை சுவிசேஷத்தோடு இசைந்து அல்ல.*

***நம்முடைய வாழ்க்கையை எப்பொழுதும் சுவிசேஷத்தோடு இசைந்தாற்போல் வாழ்வது எப்படி?***

*வசனம் 12,* ***எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதன முள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான்***

*பேதுரு யூதராக இருந்தாலும், அவர் புறஜாதியார் போல் வாழ்ந்தார். பேதுரு சுவிசேஷத்தின் சுதந்திரத்தை அனுபவித்துக்கொண்டிருந்தார்.*

*இரண்டு வகையான சுதந்திரம் உண்டு.*

1. *புறஜாதியர் விருத்தசேதனம் செய்து, சடங்குச் சட்டங்களைக் கடைப்பிடித்து ஒரு யூதராக ஆவதற்குத் அவசியமில்லை.*
2. *ஒரு யூதன் சட்டதிட்டங்கள் மரபுகள் போன்ற சுமைகளை சுமக்க வேண்டும், அனால் அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் ஒரு புறஜாதியர் போல வாழலாம்.*

## பேதுரு மற்றும் உணவு சட்டங்கள்.

***அப்போஸ்தலர் 10.***

*கொர்நேலியுவின் வீட்டில் நடந்த காரியம் இங்கே அப்போஸ்தலர் 15 ல் விவாதிக்கப்படுவதை காணலாம், அப்போஸ்தலன் பவுல் அதை கலாத்தியர் 2:1-10 ல் மேற்கோள்காட்டுகிறார்.*

*செசரியாவில் கொர்நேலியு என்னும் புறஜாதியார் இருந்தார். தேவன் பேதுரு மூலம் அங்கே சுவிசேஷத்தை அறிவிக்க விரும்பினார்.*

*யூதனாகிய பேதுருவை கொர்நேலியு என்னும் புறஜாதியனை சந்திக்கும் படி ஆயத்தம் பண்ண தேவன் பேதுருவுக்கு ஒரு தரிசனம் கொடுக்கிறார்*

***அப்போஸ்தலர் 10:9–16, 9. மறுநாளிலே அவர்கள் பிரயாணப்பட்டு, அந்தப் பட்டணத்துக்குச் சமீபித்து வருகையில், பேதுரு ஆறாம் மணிநேரத்தில் ஜெபம் பண்ணும்படி மேல் வீட்டில் ஏறினான்.10. அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான்; அதற்கு அவர்கள் ஆயத்தம் பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து,11. வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக் கிறதாகவும்,12. அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும், கண்டான்.13. அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று.14. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்.15. அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ***

***தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. 16. மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.***

***வசனம் 9, மறுநாளிலே அவர்கள் பிரயாணப்பட்டு, அந்தப் பட்டணத்துக்குச் சமீபித்து வருகையில், பேதுரு ஆறாம் மணிநேரத்தில் ஜெபம்பண்ணும்படி மேல் வீட்டில் ஏறினான்***

*இது மதிய வேளை பேதுருவின் ஜெபநேரம், பேதுரு வீட்டின் மேல் செல்கிறார். பேதுருவுக்கு இப்பொழுது ஒரு அசாதாரணமான தரிசனம் தேவை படுகிறது, புறஜாதிகளுடன் எப்படி காரியங்களை மேற்கொள்வது, எப்படி பழகுவது என்று.*

***வசனம் 10, அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான்; அதற்கு அவர்கள் ஆயத்தம்பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து,***

*வசனம் 30 சொல்லுகிறது கொர்நேலியு இப்பொழுது உபவாசம் இருக்கிறார் அக்கனமே அவருக்கு தரிசனம் மூலம் சொல்லப்பட்டது. பேதுருவும் மேலே சென்று ஜெபம் செய்து கொண்டு இருந்தார் அவர் பசியாய் இருந்தார், அவர் கீழே போய் சாப்பிடத்தான் போகிறார். அவர்கள் அவருக்காக மதிய உணவு தயார் செய்து கொண்டு இருந்தனர். பேதுருவு தன் நினைவை இழந்த நிலைக்கு சென்றார், தேவன் அவரின் நினைவில் தரிசனங்கள் படையெடுத்து வரும் படி செய்தார்.*

***வசனம் 11, வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும்***

*அவர் மேல பார்க்கும் போது பரலோகத்தை பார்க்கிறார், ஒரு பெரிய துப்பட்டி நான்கு மூலைகளிலும் கட்டப்பட்டதாக வானத்திலிருந்து இறங்கி வருவதை காண்கிறார்.*

***வசனம் 12, அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும், கண்டான்***

*அது விலங்குகளின் அனைத்து திரள்களிலும் நிறைந்துள்ளது, அவர் தரிசனத்தில் இந்த பெரிய காரியங்களை பார்க்கிறார். இப்பொழுது அதிலுள்ள மிருகங்கள் சுத்தமானதாயும் தீட்டாயும் இருந்தது.*

***லேவியராகமம் 11:2-8, 2. நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும் நீங்கள் புசிக்கத்தக்க ஜீவ ஜந்துக்கள் யாதெனில்: 3. மிருகங்களில் விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும் அசைபோடுகிறது மானவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம். 4. ஆனாலும், அசைபோடுகிறதும் விரிகுளம் புள்ளதுமானவைகளில் ஒட்டகமானது அசைபோடுகிற தாயிருந்தாலும், அதற்கு விரிகுளம்பில்லாதபடியால், அது உங்களுக்கு அசுத்த மாயிருக்கும். 5. குழிமுசலானது அசைபோடுகிற தாயிருந்தாலும், அதற்கு விரிகுளம்பில்லை; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். 6. முயலானது அசைபோடு கிறதாயிருந்தும், அதற்கு விரிகுளம்பில்லை; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். 7. பன்றியின் குளம்பு விரிகுளம்பும் இரண்டாகப் பிரிந்ததுமாயிருந்தும், அது அசைபோடாது; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும்.8. இவைகளின் மாம்சத்தைப் புசிக்கவும், இவைகளின் உடல்களைத் தொடவும் வேண்டாம்; இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது.***

*நேரம் இருக்கும் போது இந்த முழு அதிகாரத்தையும் வாசித்து பாருங்கள், இதில் இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட உணவு கட்டுப்பாடுகள் குறித்து எழுதப்பட்டுள்ளது. ஒரு யூதனின் மனதில், சுத்தமான மிருகங்களுக்கும் அசுத்தமான மிருகங்களுக்கும் இடையில் ஒரு பிரிவு இருந்தது. யூத உணவு முறையை சரியாய் கடைபிடிக்கும் யூதனானவர் சுத்தமான மிருகங்களை மாத்திரமே சாப்பிடுவர் பேதுருவும் அதைத்தான் செய்தார். அந்த அசுத்தங்களை அவர் தொட்டது கூட கிடையாது ஏனென்றால் அதுதான் பாரம்பரியம், கட்டாயம்.*

***தேவன் ஏன் சுத்தமான மற்றும் அசுத்தமான மிருகங்களை உண்டாக்கினார்?***

*காரணம் இவைகளாக இருக்கலாம்,*

1. *தொற்று நோய்களை பரப்பசெய்கின்ற மிருகங்கள் சில உள்ளன. ஏனென்றால் அந்த காலத்தில் உணவு தயாரிக்கும் முறை மிகவும் ஆரோக்கியமானதாக இல்லை, அதனால் ஆண்டவர் தொற்று நோய் பரவும் என்ற அச்சத்தின் மூலமாக தேவன் இஸ்ரவேலை சுத்திகரிக்க முயற்சித்தார். இஸ்ரவேல் தேச மக்கள் ஒரு சமுதாயமாக ஒரு கூட்டமாகவே வாழ்ந்து வந்தனர்.*
2. *இஸ்ரவேல் மக்களை புறஜாதிகளிடமிருந்து வேறுபடுத்தி காட்டும் விதமாக இருக்கலாம். அந்த நாட்களில், சமூக தொடர்பு விருந்துகளில் நடந்தது. இன்று நமக்கு இருக்கும் பொழுது போக்கு அம்சங்கள் அன்று அவர்களுக்கு இல்லை. விழாக்கள் நீண்ட நாட்களாக நடைபெறும், அவர்கள் ஒன்றாக சேர்ந்து புசித்து மகிழ்வர்.*

   *ரோமர்கள் பண்டிகைகளில் அவர்கள் சாப்பிட்டுவிட்டு வாந்தி எடுப்பார்கள் பின்பு திரும்பவும் அதிகமாக*

*சாப்பிடுவார்கள் மற்றும் பயங்கரமான காரியங்களை செய்வார்கள்.*

*எனவே விருந்துகளில் மூலமே அவர்கள் உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளுவார்கள். தேவன் இஸ்ரவேலர்களுக்கு அவர்கள் உணவுகளில் கட்டுப்பாடுகளை விதித்தார் எனவே அவர்கள் புறஜாதிகளுடன் சமுதாயத்தில் கலவ மாட்டார்கள்.*

*அவர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தில் நுழைந்தபோது, அவர்கள் புறஜாதிகளுடன் ஒன்றிணைந்து கறைபடக் கூடியது மிகவும் எளிதானது. என்றாலும் வரலாற்றை நாம் எடுத்து பார்த்தால் அதுதான் நடைபெற்றது.*

***லேவியராகமம் 20:25-26, 25. ஆகையால் சுத்தமான மிருகங்களுக்கும் அசுத்தமான மிருகங்களுக்கும், சுத்தமான பறவைகளுக்கும் அசுத்தமான பறவைகளுக்கும் நீங்கள் வித்தியாசம் பண்ணி, நான் உங்களுக்குத் தீட்டாக எண்ணச் சொல்லி விலக்கின மிருகங்களாலும் பறவைகளாலும் தரையிலே ஊருகிற யாதொரு பிராணிகளாலும் உங்களை அருவருப்பாக்காதிருப்பீர்களாக.26. கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக, நீங்கள் என்னுடையவர் களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்.***

*இஸ்ரவேலர் புறஜாதிகளோடு சம்பந்தம் கலப்பதை தேவன் விரும்பவில்லை. ஏனென்றால் முடிவில் அவர்கள் முழுவதும் புறஜாதிகளை போலவே மாறி விடுவார்கள்.*

*பேதுரு கோசர்(KOSHER) என்ற உணவு முறையை கண்டிப்பாய் கடைபிடித்த இவர் தற்போது எல்லா வகையான*

*மிருகங்களையும் அவர் காட்சியளிக்கப்பட்ட பொது அதை பார்ப்பதற்கே அவர் மிகவும் சங்கடப்பட்டார்.*

***வசனம் 13,14, 13. அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. 14. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். "***

*ஓ ! அதை விழுங்குவதற்கே மிகவும் கடினமானதாயிற்றே*

***வசனம் 14, அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். "***

*பேதுரு சொல்லுகிறார், "**அப்படியல்ல, ஆண்டவரே**" இப்பொழுது சொல்லுகிறார், "**நன் ஒருபோதும் அசுத்தமானதை புசித்து இல்லை என்று**."*

- ✓ *தேவன் ஏற்படுத்திய சட்டங்களுக்கு பேதுரு வைராக்கியமுள்ளவராக இருந்தார்.*
- ✓ *பேதுரு அசுத்தமான எதையும் தொட்டதில்லை.*

*இரண்டாவது முறையாக குரல் அவரிடம் பேசியது!*
*தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று.*

***வசனம் 15-16, அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.16. மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.***

*இது பேதுருவுக்கு ஒரு கடினமான செய்தி.*

தேவன் அவருக்கு மூன்று முறை சொன்னார்.

இந்த தரிசனத்தின் உண்மையான அர்த்தம் என்ன?
இரண்டு விஷயங்களை உங்கள் முன்பு வைக்கிறேன்.

1. **குறிப்பிட்ட அர்த்தம்.**
   தேவன் இங்கு குறிப்பாக சொல்ல வருவது என்னவென்றால் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட யூத உணவு சட்டங்களை அவர் முடித்து வைக்கிறார்.
   ஏன்?
   இரண்டு முக்கிய காரணங்களை நாம் பார்த்தோம்.
   தேவனுடைய சரீரம் எதற்காக வடிவமைக்கப் படுகிறது?
   யூதரையும் புறஜாதியரையும் ஒரே சரீரமாக இணைக்கவே.
   இந்த சமுதாய தடை அவர்களிடமிருந்து நீக்கப்பட வேண்டும் அதனால் அவர்கள் ஒன்றாக இருக்க முடியும்.
   இப்பொழுது யூதர்களும் புறஜாதியாரும் ஒரே பந்தியில் அமர்ந்திருக்க முடியும், ஏனென்றால் இப்பொழுது ஒன்றாக்கப்பட்டுவிட்டார்கள். ஆரம்ப கால சபையில் இந்த பிரச்சனைதான் அடிக்கடி எழும்பியது. ஒற்றுமையாய் சபையில் இருந்த யூதர்களும் புறஜாதியினரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடமுடியாது.
   பவுல் அதை ரோமர் 14 ல் அதை சரி செய்கிறார்.
   புறஜாதியினர் தங்கள் சலுகைகளை துஷ்பிரயோகம் செய்தார்கள். யூதர்களை பார்த்து பவுல் கூறுகிறார், தேவன் வேண்டாம் என்று ஒதுக்கிய உணவு சட்டதிட்டங்களை நீங்கள் புறஜாதியரை பின்பற்ற வைக்கவில்லையா என்று.

இயேசு இதை குறித்து மாற்குவில் பிரசங்கித்து இருக்கிறார்.

*மாற்கு 7:14-15& 18-23,*

*14. பின்பு அவர் ஜனங்களெல்லாரையும் வரவழைத்து அவர்களை நோக்கி: நீங்கள் எல்லாரும் எனக்குச் செவிகொடுத்து உணருங்கள்.15. மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாது; அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்தும்.*

*18. அதற்கு அவர்: நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்களா? புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாதென்று நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா?19. அது அவன் இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது; அதிலிருந்து எல்லாப் போஜனங்களின் அசுத்தங்களையும் கழிக்கிற ஆசனவழியாய் நீங்கிப்போகும்.20. மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்.21. எப்படி யெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், 22. களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும்.23. பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்."*

*இது பற்றி தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதுகிறார்.*

*1 தீமோத்தேயு 4:4-5, தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக் கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத் தக்கதல்ல.5. அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்*

2. **பொதுவான அர்த்தம்.**

*அந்த தரிசனமானது சுத்தமான மிருகங்களை யூதர்களாகவும், அசுத்தமான மிருகங்களை புறஜாதிகளாகவும் சித்தரிக்கிறது.*

*சுத்தமான மிருகங்கள் யூதர்களை குறிக்கிறது.*
*அசுத்தமான மிருகங்கள் புறஜாதியாரை குறிக்கிறது.*
*தேவன் சொல்லுகிறார், "யூதரும் புறஜாதியும் தேவாலயத்தில் கலந்திருப்பார்கள்" என்று.*
*அந்த துப்பட்டி சபையை குறிக்கிறது.*
*சபை பரலோகத்தில் பிறந்தது!*
*சபை பூமிக்கு இறங்கி வந்தது.*
*அது யூதர்களையும் புறஜாதியரையும் கொண்டது.*

*இந்த தரிசனத்தில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் அது சொல்லுகிறது "**அந்த கூடு**" அது நிறைவடையும் போது "**திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது**."*

*சபை எப்படி இந்த உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும்?*
***இரகசிய வருகை!***
*சபையானது பொதுவான மற்றும் பொதுவல்லாத, யூதர் மற்றும் யூதரல்லாத எதுவும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும். வெறும் ஏற்றுக் கொள்ளப்படுதல் மட்டும் அல்ல திரும்பவும் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். எனவே நாமும் புறஜாதியாரை சபைக்குள் ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும்.*

*இனிமேல் உணவு பழக்கமுறைகளை பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று பேதுரு கற்றுக்கொண்டார், தேவன்*

இரண்டையும் ஏற்றுக்கொண்டார் மற்றும் அதை தன்னிடமாக சேர்த்துக்கொள்வார் என்றும் அறிந்து கொண்டார்.
தேவன் அந்த கலந்து கொள்ளுதலை ஏற்றுக்கொண்டால் நாமும் ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும்.

இப்படி தான் பேதுருவின் இருதயம் காரியங்களுக்காக தயார் செய்யப்பட்டது.

எனவே பேதுரு இப்பொழுது கொர்நேலியுவின் வீட்டிற்கு புறப்படுகிறார், அப்பொழுதும் தாம் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியானவரை பற்றி உபதேசம் பண்ணிக்கொண்டு இருந்தார்.

பேதுருவுக்கு ஏற்பட்ட ஆச்சர்யத்தை கொஞ்சம் சிந்தித்து பாருங்கள் இவர் முழுவது யூத குல சிந்தையை உடையவர், அங்கிருக்கும் புறஜாதியார் எந்தவித சடங்குகளையும் நியாயங்களையும் பின்பற்றாமல் பரிசுத்த ஆவியை வெறும் சுவிசேஷத்தை விசுவாசித்து மாத்திரம் பெற்றுக்கொள்வதை அவர் எப்படி அதிசயமாக பார்த்து இருப்பார்.

பேதுரு தன்னுடைய வாழ்க்கை முழுமையாக மாறுவதை அனுபவித்து இருப்பார். யூத கிறிஸ்தவர்கள் அனுபவிக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை புறஜாதியரும் அனுபவிக்க எந்த வகையிலும் பழைய ஏற்பாட்டு விருத்தசேதனம் அல்லது பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள பாரம்பரிய சட்டதிட்டங்களை பின்பற்ற அவசியம் இல்லை என்பதை பேதுரு நன்றாக புரிந்து கொண்டார்.

அவர் இன்னோரு காரியத்தையும் நான்றாக புரிந்து கொண்டார் ஒரு யூதனாக அவரும் அந்த பாரம்பரியங்களிலிருந்து விடுதலை பெற்றதை. சற்று

*மெதுவாக மற்றும் நிச்சயமாக பேதுருவும் பவுலும் சுவிசேஷத்தின் உண்மையை ஒரே விதமான வெளிப்பாட்டோடு ஒரே புரிதலோடு கூட சுதந்திரமாக செயல் பட துவங்கினர்.*

*பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டு எல்லா விதமான ஆவிக்குரிய அனுபவங்களை அனுபவிக்க ஒரே ஒரு கட்டாயம் தான் அது என்னவென்றால் இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் வாழ்வதே ஆகும்!*

***கலாத்தியர் 3:2, ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறியவிரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியை களினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?***

*அது தான் சுவிசேஷம்!*
*பேதுரு அந்தியோகியாவில் உள்ள சகோதர மற்றும் சகோதரிகளோடு சாப்பிட பொது சுவிசேஷம் அவர் வாழ்வில் இசைந்து இருந்தது. அவர் சுயாதீனத்தில் வேகமாக செயல்பட்டார், இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் அவரின் கிரியைகளை கனப்படுத்தினார், அன்பான வாழ்க்கை வாழ்ந்தார்.*

## பேதுரு சுவிசேஷத்தோடு இசைந்து வாழாமல் இருந்தது

*விருத்தசேதன குழு ஒன்று எருசலேமிலிருந்து வந்து தன்னை யாக்கோபிடமிருந்து வந்ததாக அழைத்து கொள்ளுகிறார்கள் (வ. 12).*

*பேதுரு இந்த குழுவிற்கு அஞ்சினார்.*
***ஏன்?***

- ✓ *ஒருவேளை அவர்கள் வன்முறை செய்யவும் தயங்காத ஆட்களாக இருக்கலாம்.*
- ✓ *ஒருவேளை பேதுரு தன்னுடைய சுயாதீனத்திற்கு சரியான விளக்கம் கூற முடியாமல் இருந்து இருக்கலாம், அவர் ஒரு முட்டாள் போல காட்சியளித்து இருக்கலாம்.*
- ✓ *ஒருவேளை பேதுரு தன்னுடைய நிலையிலிருந்து விழுந்து விட்டு எருசலேமில் உள்ள மக்களுக்கு முன்பாக ஒரு தவறான செய்கையை செய்தவன் போல் சித்தரிக்கப்பட்டு விட்டால் என்ன செய்வது என்று பயந்து இருப்பார்.*
- ✓ *முதன்மையான அப்போஸ்தலன் என்ற தன்னுடைய பெயருக்கு களங்கம் வந்து விடுமோ அச்சம் ஏற்பட்டு இருக்கலாம்.*

*அவர் ஏன் பயப்பட்டார் என்று சொல்லப்படவில்லை, அனால் அவர் பயந்தார்!*

*தன்னுடைய பெலவீனத்தின் காரணமாக ஒருகனம் தன்னை புறஜாதி சகோதர சகோதரிகளிடமிருந்து விலக்கி கொண்டார். ஒரு தலைவராக அவர் இதை செய்த பொது, உடன் இருந்த பர்னபாவும் மற்ற யூதர்களும் அதையே செய்தார்கள்.*

*கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள் நீங்கள் அப்பொழுது இருந்த அந்தியோகிய சபையில் ஒரு கிறிஸ்தவராக இருந்து இருப்பீர்கள் ஆனால்* ***என்ன செய்து இருப்பீர்கள்****?*

***வ 14, இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச்சொன்னது என்னவென்றால்: யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக***

***நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்து கொண்டிருக்க, புறஜாதியாரை யூதர்முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக்கட்டாயம் பண்ணலாம்?***

*இந்த வசனத்தை பொறுத்த வரை பேதுரு பர்னபா மற்றும் உடன் இருந்தவர்கள் "சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை" காண முடியும்.*

*அவர்கள் சுவிசேஷ சத்தியத்திற்கு ஏற்றபடி சரியாக நடந்துகொள்ளவில்லை. அவர்கள் தற்போது சுவிசேஷ பாதையிலிருந்து விலகிவிட்டனர்.*

*இதன் அர்த்தம் என்னவென்று பார்த்தீர்களா?*

*சுவிசேஷத்தின் பலன்கள் தேவா குமரன் மீது விசுவாசம் வைத்து வாழ்வதன் மூலமாகவே கிடைக்கும், மனுஷ கிரியைகள் மூலம் அல்ல.*

*விசுவாசத்தின் மூலம் நீங்கள் சுவிசேஷம் பெற்றுக்கொள்ளும் போது உங்கள் வாழ்க்கை மாறும்.*

*நீங்கள் சுயமாய் சுத்திகரிக்கும் சில காரியங்கள் மூலமாய் சுவிசேஷத்தின் பலன்களை அனுபவிக்க முடியாது.*

*நீங்கள் மன்னிப்பு மற்றும் மகிழ்ச்சி, சமாதானம் மற்றும் வல்லமையை உங்கள் தினசரி வாழ்க்கையில் அனுபவிக்க உங்களை நேசித்து தன்னையே தந்து இயேசு கிறிஸ்துவை சார்ந்து வாழ்வதால் மட்டுமே முடியும்.*

***அவர்கள் நற்செய்தியோடு ஒத்துப்போகாத காரணத்தை இப்போது பார்ப்போம்?***

## *1. பயம்*

*சுவிசேஷம் பயத்தை தராது!*

***2 தீமோத்தேயு 1:7, தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.***

*நீங்கள் இந்த செய்தியை பார்க்கும்போது, வாசிக்கும்போது உங்களுக்கு கோபம், பதட்டம், மன அழுத்தம், பயம் கலந்த மன சோர்வு அல்லது ஏதோ தவறாக நடக்கிறது என்ற தெளிவற்ற நிலைமை இருக்குமானால் நீங்கள் செய்ய வேண்டியது இந்த மிகப்பெரிய சுவிசேஷத்தை மீண்டும் ஒருமுறை பார்க்க வேண்டும்.*

*நீங்கள் நிறுத்தி ஆழமாக சிந்தித்து தேவனின் நோக்கம் உங்கள் மேல் என்ன, எதற்காக அவர் தம்முடைய ஒரே பேரான குமாரனை உங்களுக்காக கொடுத்தார் என்ன சிந்தியுங்கள்.*

***சர்வவல்ல தேவன் உங்கள் பக்கம்*** *நீங்கள்* ***விசுவாசியுங்கள்****, உங்களுக்கு எதிராக அல்ல.*

***ரோமர் 8:31-34, இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?32. தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? 33. தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். 34. ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய***

**வலதுபாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே**

***எபிரெயர் 13:6, அதினாலே நாம் தைரியங் கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே?"***

*இங்கு பேதுருவுக்கு ஏற்பட்டது போல நமக்கும் சற்று விசுவாசத்தில் வீழ்ச்சி ஏற்படலாம். ஆனால் தேவன் கிருபையுள்ளவர்! தேவன் பவுலை பேதுருவிடம் அனுப்பினார் எனவே பேதுரு மறுபடியும் சுவிசேஷத்தோடு இசைந்து வாழ முடியும்.*

*தயவு செய்து எந்த வகையிலும் எந்த மனிதன் மேலும் பயம் கொள்ளாதீர்கள்.*

***2. மாயம் பண்ணுதல்***

***வ 13, மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம்பண்ணினார்கள்; அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான்***

*மீதமுள்ள யூதர்களும் பேதுருவுடன் சேர்ந்துகொண்டார்கள். பேதுருவும் பர்னபாவும் புறஜாதி கிறிஸ்தவர்களுடன் சாப்பிட்டுக்கொண்டு இருக்கும் வேளையில் விலகும் போது இருமுகம் கொண்டவர்களாக நடந்து கொண்டனர். அவர்கள் நடத்தையும் வார்த்தையும் வெவ்வேறாக இருந்தது. அவர்கள் கிரியைகள் ஒரு மாதிரியும் அவர்கள் இருதயத்தில் விசுவாசிப்பது வேறு மாதிரியும் இருந்தது.*

*மக்களுக்கு ஏற்றார் போல் சுவிசேஷத்தை மாற்றிக்கொள்ள தயாராய் இருந்தனர். உங்கள் கொள்கை மீது ஒருபோதும் சமரசம் செய்யாதீர்கள்.*

*பயம் மாயத்தை கொண்டு வருகிறது. மாயத்தனத்திற்கு பயமும் சந்தேகமும் தான் வேராக உள்ளது.*

***லூக்கா 12:1–4, 1. அத்தருணத்திலே அநேகமாயிரம் ஜனங்கள் ஒருவரை ஒருவர் மிதிக்கத்தக்கதாகக் கூடிவந்திருக்கையில், அவர் முதலாவது தம்முடைய சீஷரை நோக்கி: நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.2. வெளியாக்கப்படாத மறை பொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை.3. ஆதலால், நீங்கள் இருளிலே பேசினது எதுவோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ, அது வீடுகளின்மேல் கூறப்படும்.4. என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: சரீரத்தைக் கொலைசெய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்***

*பாதுகாப்பு இல்லாமல் இருப்பது சுவிசேஷத்திற்கு பொருத்தமற்றது. நீங்கள் பாதுகாப்பு இல்லாமல் அல்லது பயப்படும் போது இவைகள் வெளிப்படும். முடிவில் நீங்கள் முகத்திற்கு முன்பாக நடிப்பவர்கள் ஆகா மாறி நீங்கள் நம்புவதை மறுக்க ஆரம்பித்து விடுவீர்கள்.*

*உங்கள் சிந்தையை இயேசுவின் மேலும் அவர் சுவிசேஷத்தின் மேலும் வையுங்கள் மாயம் பண்ணுதல் உங்களை விட்டு ஓடிப்போகும்.*

### *3. உட்படுத்திக்கொள்ளுதல் Legalism*

***வ 14, இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச்சொன்னது என்னவென்றால்: யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக***

***நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறஜாதியாரை யூதர்முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக்கட்டாயம் பண்ணலாம்?***

*பேதுருவுக்கும் பவுலுக்கும் இடையிலான உரையாடலை நீங்கள் கற்பனை செய்ய விரும்புகிறேன்.*

***நான் யாரையும் கட்டாயம் பண்ணவில்லை என்று பேதுரு சொல்லியிருந்தால் பவுல் என்ன சொல்லியிருப்பார்?***

*பவுல் பேதுருவை பார்த்து நீ சொல்லவில்லை என்றாலும் உன் நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.*

*நீ ஒரு அப்போஸ்தலனாக புறஜாதி சகோதரர் மற்றும் சகோதரிகளிடமிருந்து விருந்தில் தனிமைப்படுத்தி கொண்டாய், ஏன் அவர்கள் யூத உணவு பழக்க வழக்கங்களை பின்பற்றாததினால் அல்லவா?*

*நீ பர்னபா மற்றும் பிற யூதர்களையும் உண்டு சேர்த்து கொண்டாய். இப்பொழுது புறஜாதியினர் முழு கிறிஸ்தவனாக மாற வேண்டுமானால் யூதரை போலாக வேண்டும் போல என்ன சிந்தித்து இருப்பார்களே!*

*இதுதான் உட்படுத்தி கொள்ளுதல் Leglism.*

*உட்படுத்தி கொள்ளுதல் என்றால் என்ன?*
*ஒரு நபர் தேவனால் மற்றும் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட நியாயப்பிரமான கிரியைகளை நடப்பிக்க வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பது.*

*இந்த உட்படுத்திக்கொள்ளுதலை நீங்கள் பின்பற்றினால் சுவிசேஷத்தோடு இசைந்து வாழவில்லை என்று அர்த்தம்.*

***கலாத்தியர் 2:21, "நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப் பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே."***

*தீத்து கண்டிப்பாக விருத்தசேதனம் பண்ணித்தான் ஆக வேண்டும் என்பது எருசலேமில் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருந்தால் அல்லது புறஜாதி கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தோடு ஒன்றாக இணைக்கப்பட்டு அந்த ஐக்கியத்தை அனுபவிக்க யூத உணவு முறைகளை பின்பற்றி தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு இருந்தால் கிருபை வீணாய் போய் இருக்கும், கிறிஸ்து மரித்ததும் வீணாகி இருக்கும்.*

## *முடிவுரை:*

*கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் மனுஷர் உங்களுக்கு என்ன செய்வானோ என்று பயப்பட வேண்டாம். உங்களில் உள்ள எந்த அளவிலான பயத்தையும் எடுத்து போடுங்கள்.*

*கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்!*
*மாயமாலம் பண்ணாதிருங்கள்.*
*வேதத்தில் உள்ள கோட்பாடுகளுக்கு உங்களை அற்பணியுங்கள் அதனால் ஏற்படும் துன்பங்களை சகித்துக்கொள்ளுங்கள்.*
*சுவிசேஷத்தால் எல்லா அளவிலுமான பாதுகாப்பும் ஆறுதலும் உண்டு.*

*கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்!*
*தேவனின் கிருபையை விருதாவாக்காதீர்கள்.*

***"கிருபையினால் விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானது அல்ல இது தேவனுடைய ஈவு இது மனிதன் தற்பெருமை கொள்ள கிரியைகளினால் உண்டானது அல்ல."***

*நம்முடைய எல்லா செயலிலும் தேவனை மகிமைப்படுத்துவதும் உயர்த்துவதுமே நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும் மனிதர்களுடைய சாதனையை பற்றி பேசுவது அல்ல. எனவே நாம் சுவிசேஷத்தோடு எப்பொழுதும் இசைந்து வாழ்வோமாக!!*